*2020 செப்டம்பர் 16]* [பேரவைத் தலைவர்]

*பேரவை விதி 51-ன்கீழ் 2,000 உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியில்லாதவைகளாக மாற்றம் செய்யப்பட்டு, 10 பட்டியல்களாக 6 முதல் 15 வரை மற்றும் 100 உடுக்குறியிடாத வினாக்கள் கொண்ட 16 ஆவது பட்டியல் ஆகியவற்றின் வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணை பட்டியலாக தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம்* PDF *முறையில் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப்பட்டுள்ளன. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் மற்றும் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றம் செய்யப்பட்ட வினாக்கள்-விடைகள் ஆகியவற்றின் நகல்கள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேற்குறிப்பிட்ட வினாக்கள்-விடைகள் பட்டியல்களின் தலா இரண்டு பிரதிகளும், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள், தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் ஆகியவற்றின் 10 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக கலைவாணர் அரங்கத்தின் முதல் தளத்திலுள்ள சட்டமுன்வடிவு-1 பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

## 5. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (இ) கொரோனா தொற்று காரணமாக திருவண்ணாமலை மற்றும் திருக்கோயிலூர் நகராட்சிகளுக்குட்பட்ட மூடப்பட்டிருந்த கடைகளுக்கான வாடகையை இரத்து செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலு, என்ன?*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகிறேன். அரசினுடைய ஆணையை ஏற்று 5 மாதக் காலமாக கொரோனா வைரஸ் தொற்றால் திருவண்ணாமலை மற்றும் திருக்கோயிலூர் நகராட்சிகளுக்கு உட்பட்டிருக்கிற கடைகள் என தமிழ்நாடு முழுவதும் உள்ள கடைகளெல்லாம் மூடப்பட்டிருந்தன. இப்பொழுது அந்தக்*

கடைகளுக்கெல்லாம் அதிக வரி கொடுக்க வேண்டும்; வாடகை தர வேண்டும்; சொத்து வரி கொடுக்க வேண்டுமென்று அரசு அலுவலர்கள் நிர்பந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிற கடைகளுக்கு வாடகையையும், அதேபோன்று நகராட்சிகளுக்கு சம்பந்தப்பட்டிருக்கிற கடைகளினுடைய வாடகையையும் இரத்து செய்து கொடுத்தால் அது வாழ்வாதாரத்தை இழந்திருக்கிற வாடகைதாரர்களுக்கு, அவர்கள் பிழைப்பு நடத்துவதற்கு வகையாக இருக்கும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

## 8. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2021 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 153 முதல் 171 வரையிலான 19 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

**திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் மூன்று முக்கிய நிதிக் குழுக்களில் ஒன்றான பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக இரண்டாவது முறையாக எனக்கு வாய்ப்பளித்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையிலே குழுவின் தலைவராக நீங்கள் என்னை